# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 68/2019 நாள்.15.07.2025

DW1- திருமதி. சதானந்தபதி, க /பெ. திரு.கோவிந்தராஜ்

வாதிதரப்பில் குறுக்குவிசாரணை

எனக்கு சொந்த ஊர் என்ன என்றால் குருங்குளம். அங்கு நான் என் கணவர் மாமியார் குழந்தைகளுடன் கூட்டு குடித்தனமாக உள்ளோமா என்றால் ஆமாம். எனக்கு இரண்டு மகள்கள், ஒரு மகன் என்றால் ஆமாம். ஒரு பெண்ணுக்கு 2020 இல் திருமணமாகிவிட்டது என்றும், எனது மகன் வெளிநாட்டிற்கு போய் 5 ஆண்டுகள் ஆகிறது என்றால் ஆமாம். நான் பிறந்த இடம் பள்ளியாக்கிகாரம் என்றும் அங்கு என் தாயார் வசித்து வருகிறார் என்றால் ஆமாம். நிலங்கள் குருங்குளத்தில் உள்ளது என்றால் ஆமாம். என் பெயரில் 5 1/2 மா உள்ளது என்றால் 4 மா உள்ளது. என் கணவர் பெயரில் அவருடைய அப்பா 65 சென்ட் எழுதி வைத்தார் என்றால் ஆமாம். 2 ஏக்கர் சொந்த விவசாய நிலம், சொந்த மனைகட்டு வீடு உள்ளது என்றால் ஆமாம். மெயின் ரோட்டில் உள்ள 2 ஏக்கர் 5 லட்சம் போகுமா என்றால் ஏக்கர் 10 லட்சம் போகும். 2ஏக்கரில் வருடத்திற்கு எவ்வளவு விளையும் என்றால் 40000, 50000 வரும். ஒரு இடத்தில் மின்னிணைப்பு உள்ளது என்றால் ஆமாம். எத்தனை விளைச்சல் செய்வோம் என்றால் ஒரு விளைச்சல் தான் செய்வோம். எங்கள் ஊரிலிருந்து 2 கி.மீ மூக்கப்படையானபள்ளம் உள்ளது என்றால் சொல்லியுள்ளார்கள் நான் போனதில்லை. வீரமுண்டான்குடிகாடு எங்கு உள்ளது என்றால் தெரியாது. வழக்கு போட்ட முருகேசனுக்கு 50 ஏக்கர் நிலம் உள்ளது என்றும் ஜெசிபி உள்ளது என்றும் அவருக்கு வீரமுண்டான்குடிகாடு, மூக்கப்படையான்பள்ளம் நிலம் உள்ளது என்றால் அவரை தெரியாது. தாவாவில் வாதி அவருக்கு 50 ஏக்கர் சொத்து உள்ளதாக ஆவணம் போட்டுள்ளார் என்றால் தெரியாது. அந்த ஆவணம் என்ன என்று மனு போட்டு பார்த்தேனா என்றால் இல்லை. வழக்கில் வழக்கறிஞர் அறிவிப்பு 13.4.2019 இல் என்னுடைய வீட்டு விலாசத்திற்கும், பள்ளிக்கிராகார விலாசத்திற்கும் அனுப்பினார் என்றால் பள்ளியக்கிகாரத்திற்கு அனுப்பியதை நான் வாங்கினேன். **வா.சா.ஆ.15** ஆகும். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் மற்றொரு ஒப்புகை அட்டையில் உள்ள கையெழுத்து என்னுடைய கணவருடையதா என்றால் அது **வா.சா.ஆ.16** ஆகும். குருங்குளத்திற்கு அனுப்பியதை நான் வாங்கவில்லை. அந்த அறிவிப்பை வாங்கி இரண்டு மாதம் கழித்துதான் 18.6.2019இல் பதில் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் ஆமாம். பதில் அறிவிப்பு கொடுப்பதற்கு முன்பாகவே 7.6.2019இல் வாதி வழக்கு போட்டுவிட்டார் என்றால் ஆமாம். 07.6.2019க்கு பிறகு நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த புரோநோட்டை வாங்கி பார்க்க மனு போட்டேனா என்றால் வழக்கறிஞர் மூலம் மனு போட்டு வாங்கி பார்த்தேன். அதன்பிறகுதான் பதில் போட்டோமா என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் அஞ்சல் ஒப்புகை அட்டை கையெழுத்து என்னுடையதா என்றால் ஆமாம். அசல் புரோநோட் வழக்கு தாக்கல் செய்தபோதே நீதிமன்றத்தில் வாதி தாக்கல் செய்துவிட்டார் என்றால் ஆமாம். அதன்பிறகு நீதிமன்றத்தில் புரோநோட்டில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதல்ல என்பதற்கு இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் போட்டுள்ளோம். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் இன்சியல் போட்டு கையெழுத்து போடமாட்டேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ. 7 இல் உள்ள கையெழுத்து இன்சியல் போட்டு போட்டுள்ளேனா என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் வா.சா.ஆ.1இல் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் என்னுடையதல்ல. பி.வா.சா.ஆ.7, பி.வா.சா.ஆ. 9 மற்றும் 10 உள்ள கையெழுத்துக்கள் மற்றும் வா.சா.ஆ.15

ஆகியவற்றில் உள்ள கையெழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாதிரியாக உள்ளது என்றால் எல்லாம் ஒருமாதிரியாகதான் உள்ளது. நான் கையெழுத்துக்களை ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு மாதிரியாக போடுகிறேன் என்றும் வழக்கிற்காக தற்போது ஒரே மாதிரியாக இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்தது தெரிந்து கொண்டு வழக்கை சோடிப்பதற்காக அசல் புரோநோட்டை கேட்டு பதில் கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8, 10 ஆவணங்களில் உள்ள எனது கணவரின் கையொப்பங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக உள்ளது என்றால் ஒரே விதமாகதான் உள்ளது. .வா.சா.ஆ.1 இல் உள்ள கையெழுத்தும், பி.வா.சா.ஆ.10 இல் உள்ள கையெழுத்தும் ஒரே மாதிரியாக உள்ளதா என்றால் இல்லை. 2019 இல் உள்ள ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.16 கையெழுத்தும், பி.வா.சா.ஆ.8, 10 ஆகியவற்றில் உள்ள கையெழுத்துக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான உள்ளது என்றால் ஒரே விதமாக உள்ளது. மேற்படி ஆவணங்களில் உள்ள கையெழுத்துபோலதான் வா.சா.ஆ.1 இல் உள்ள கையெழுத்து உள்ளது என்றால் நாங்கள் போடவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் மூக்கப்படையான்பள்ளத்தில் எழுதபட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லவில்லை. மூக்கப்படையானபள்ளத்தை பற்றி என்ன சொல்லியுள்ளேன் என்றால் ஒன்னும் சொல்லவில்லை. வா.சா.2 சிங்காரவேலு என் பக்கத்து வீட்டுகாரர் என்றால் ஆமாம். சிங்காரவேலுக்கும் எங்களுக்கும் விரோதம் இருப்பதாக வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனே அதற்கு ஆதாரமாக ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். கோமாபுரத்தில் விஜி என்கிற விஜயகுமாரிடம் எவ்வளவு கடன் வாங்கினோம் என்றால் ரூ 2லட்சம். குருங்குளத்தில் உள்ள தேவனிடம் நகைநட்டு கடனாக எவ்வளவு வாங்கினோம் என்றால் வாங்கவில்லை. அற்புதாபுரத்தை சேர்ந்தவரிடம் எவ்வளவு கடன் வாங்கினோம் என்றால் ஐம்பதாயிரம் வாங்கினோம் திருப்பி கொடுத்துவிட்டோம். விஸ்வலிங்கம் என்பவர் எனது ஊரை சேர்ந்தவர் என்றால் ஆமாம். விஸ்வலிங்கத்தை வைத்து எங்கள் ஊரில் கோமாபுரத்துகாரர், அற்புதாபுரத்துகாரர், எங்கள் ஊரை சேர்ந்தவர் மற்றும் இவ்வழக்கின் வாதி முருகேசன் ஆகியோருக்கு பஞ்சாயம் நடந்தது என்றால் முருகேசனுக்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை மற்றவரிடம் வாங்கிய கடனுக்கு பஞ்சாயம் நடந்தது. மேற்படி பஞ்சாயத்திற்கு பிறகுதான் அறிவிப்பு அனுப்பினார் என்றால் ஆமாம். மேற்படி பஞ்சாயத்தில் மூவரின் கடனையும் தீர்த்துவிட்டதாக சொல்லுகிறேன் என்றால் ஆமாம். அறிவிப்பு அனுப்பியதற்கு பிறகு நான் போலிஸில் வாதி பெயரில் போலியாக நோட்டிஸ் கொடுத்துள்ளார் என்று வாதிபெயரில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. பி.வா.சா.ஆ.7 மற்றும் 8 2013, 2014 காலகட்டம் என்றால் ஆமாம். என் கணவருக்கும் எனக்கும் எழுதபடிக்க தெரியுமா என்றால் கையெழுத்து மட்டும் போடுவோம். எனக்கும் அவருக்கும் எழுதபடிக்க தெரியாததால் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு விதமாக கையெழுத்து போட்டுள்ளோம் என்றால் ஒரே மாதிரியாகதான் போட்டுள்ளோம். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்துக்கள் நானும் என் கணவரும் போட்டோம் என்றால் இல்லை. ஆவணங்களில் உள்ள கையெழுத்துக்கள் ஒவ்வொரு மாதிரி உள்ளதை பயன்படுத்திகொண்டு வா.சா.ஆ.1 இல் உள்ள கையெழுத்து எங்களுடையது இல்லை என்று மறுக்கிறோம் என்றால் சரியல்ல. வாதி முருகேசனை நன்கு தெரியும் என்றும் அப்படி தெரிந்தன்பேரில் ரூ 12 லட்சம் கடன் வாங்கினோம் என்றம் அன்றைக்கே அந்த கடனுக்காக ஒரு புரோநோட் எழுதி கொடுத்தோம் என்று சொன்னால் கடனும் வாங்கவில்லை புரோநோட்டும் எழுதி கொடுக்கவில்லை. வா.சா.ஆ1 இல் சாட்சிபோட்டுள்ள சிங்காரவேலு, ராசா மற்றும் எழுதிய வைரவேல் ஆகியோரை எனக்கு நன்றாக தெரியும் என்றும் அவர்களை நாங்கள் அழைத்து வா.சா.ஆ.1 வாதிக்கு எழுதிகொடுத்தோம் என்றால் சரியல்ல. நான்கு மாதத்தில் கொடுப்பதாகவும், ஒரு பைசா வட்டி கொடுப்பதாகவும் ஒப்பு கொண்டு எழுதி கொடுத்தோம் என்றால் சரியல்ல. சொன்னபடி பணம் தரவில்லை என்றும், அதனால்தான்

வாதி வேறு வழியில்லாமல் அறிவிப்பு அனுப்பி இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. வாக்குமூலத்தில் சொல்லியுள்ள ஏழை என்பதும் கடன் வாங்குவது அவசியமில்லை என்று சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. குடும்ப சூழ்நிலைக்காக வாதியை நம்ப வைத்து கடன் வாங்கி திருப்பி கொடுக்காமல் ஏமாற்றினோம் என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் சொல்லபட்டுள்ள விரோதம் என்பது வாதிக்கு சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வாதிக்கு கடனுறுதி சீட்டின் கடனையும் அசலையும் கொடுக்க கடமைபட்டவர் என்று சொன்னால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.